# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 06 செவ்வாய்க்கிழமை (22.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 267

# மோதல் தவிர்ப்புக் குறித்துப் பரிசீலிக்க தமது அரசு தயார் என்கிறார் ஜனாதிபதி

## உறுதியான - தெளிவான - கோரிக்கை தலைவர் பிரபாவிடமிருந்து வரவேண்டுமாம்



கொழும்பு, ஓகஸ்ட் 22

தற்போது நடைபெற்றுவரும் சண்டையை நிறுத்துவதற்கு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப் படக்கூடிய மோதல் தவிர்ப்பு யோசனை எதனையும் சிரத்தையுடன் பரிசீலிக்கத் தமது அரசு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

அத்தகைய யோசனை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் உறுதியான - தெளிவான - அர்ப்பணிப்புடன் கூடிய வகையில் முன்வைக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

நேற்று தம்மைச் சந்தித்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடமே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளே நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

நாட்டின் வடபகுதியில் நடைபெற்றுவரும் மோதல்களால், அந்தப் பகுதி நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்து துண்டிக்கப்பட்டிருப்பது குறித்தும், அங்கு உருவாகிவரும் மனிதாபிமான நெருக்கடி நிலைமை பற்றி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் தேர் இன்று: உள் வீதியில் வலம்



யாழ்ப்பாணம், ஓக.22

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்றாகும். குடாநாட்டில் நீடித்து வரும் ஊரடங்கு மற்றும் போர்ச் சூழ்நிலை காரணமாக இன்று முருகப் பெருமானின் தேர்ப் பவனி உள்வீதியிலேயே நடைபெறும்.

இன்று காலை 10 மணி 15 நிமிடத்துக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி 11மணியளவில் ஆறுமுகசுவாமி உள்வீதி வலம் வருவார். நாளை தீர்த்தோற்சவமும் இதே நேரத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டை நடக்கும் பகுதிகளில் இருந்து கண்காணிப்புக் குழுவினர் வாபஸ்!

கொழும்பு, ஓக.22

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதன் உறுப்பினர்களை கொழும்புக்கு திருப்பி அழைத்துள்ளது.

சண்டை நடைபெறும் பகுதிகளில் இருந்து கண்காணிப்பாளர்கள் தற்காலிகமாக கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று குழுவின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கு பகுதிகளில் பணியாற்றிய பிரதிநிதிகளைத் திருப்பி அழைப்பது என்ற முடிவை பதவி விலகிச் செல்லும் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸன் மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சண்டையில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பாருமே களத்தில் கண்காணிப்புக் குழுவின

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக நோர்வேயின் ஓய்வு பெற்ற படைஅதிகாரி

கொழும்பு, ஓக.22

நோர்வே இராணுவத்தின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் லாஸ் ஜோன் ஸோல்வ்பேர்க் (வயது-54), இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அடுத்த தலைவராக இந்த மாத இறுதியில் பதவியேற்பார் என இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சுவீடனைச் சேர்ந்த தற்போதைய கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸனிடமிருந்து ஜெனரல் ஸோல்வ்பேர்க் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்.

நோர்வே இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பொறுப்பிலிருந்து 2005 இல் ஸோல்வ்பேர்க் ஓய்வு பெற்றிருந்தார். அதற்கு முன்னர் நோர்வே இராணுவத்தின் 6 ஆவது டிவிஷனுக்கு நான்கு ஆண்டுகள் அவர் தலைமை வகித்திருந்தார்.

நோர்வே இராணுவத்தில் கடந்த தசாப்த காலத்தில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களில் இவரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது என்று கூறப்படுகின்றது.

காலாட் படை பிரிகேட் ஒன்றையும், பொறிமுறை காலாட்படை பிரிகேட் ஒன்றை

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

பரந்தன், ஓக.22

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டு செல்லப்பட்ட இரு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களான இருவர் உட்பட ஐந்து பேர் ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினரால் இடை வழியில் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இருதய நோய்ப் பாதிப்பிற்குட்பட்ட 15 நாள் குழந்தையான வக்சலா, மூச்சுத் திணறல் நோய்ப் பாதிப்பிற்கு உட்பட்ட 09 நாள் குழந்தையான ஜெயராணி, கர்ப்பிணித் தாய்மார்களான குணமணி, பாலதீபா மற்றும் 65 வயதுடைய துரைராசா ஆகிய நோயாளர்கள் நேற்று முற்பகல் அம்புலன்ஸ் வாகனம் மூலம் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஓமந்தை ஊடாக பயணிப்பதற்கு ஏற்கனவே அனுமதி பெறப்படாததா

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய உணவுடன் வரும் கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும்!

### யாழ்.மாவட்ட செயலகம் விரிவான ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.22

கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட உள்ள கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


பருத்தித்துறைக்கு கப்பல் வந்து சேர்ந்ததும், அதிலிருந்து உடனடியாக பொருள்களை இறக்குவதற்கு வசதியாக பல நோ.கூ.சங்கங்களின் லொறிகள் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் -

இதற்காக சம்பந்தப்பட்ட சங்கங்களின் லொறிகளை இன்றைய தினம் கோண்டாவிலில் உள்ள உணவுக் களஞ்சியத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது - என்றும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த தமிழ் அரசியல்வாதி சிவமகாராஜா ஊரடங்கு இரவில் சுட்டுப் படுகொலை!



யாழ்ப்பாணம், ஓக.22

மூத்த தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முதுபெரும் கூட்டுறவாளருமான சின்னத்தம்பி சிவமகாராஜா நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் - தெல்லிப்பழையிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தெல்லிப்பழை - கொல்லங்கலட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட சிவமகாராஜா, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்குச் சமீபமாக - அவரது தற்காலிக வதிவிடத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சுடப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் தெல்லிப்பழை பிரதேச சபையின் நூலகத்தில் பணியாற்றிய இவர் பின்னர் கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டு கூட்டுறவின் முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்டார். இறக்கும் போது அவருக்கு வயது 66.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் மூத்த உறுப்பினரான சிவமகாராஜா முதலில் 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் சார்பில் சுயேச்சைக் குழுவில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். பின்னர் 2000 ஆம் ஆண்டு

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிந்திய திருச்சபை யாழ்.பேராயராக தியாகராசா நியமனம்

கொழும்பு, ஓக.22

தென்னிந்திய திருச்சபையின் யாழ்.அத்தியாட்சாதீன பேராயராக அதிவண கலாநிதி டானியல் தியாகராசா நேற்று திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆதீனத்தின் மகா சபை சென்னையில் நேற்றுக் கூடி இத் தீர்மானத்தை எடுத்தது. அங்கேயே அந்த நியமனப் பொறுப்பு கலாநிதி டானியல் தியாகராசாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



20.08.2006 அன்று தெல்லிப்பழையில் படுகொலை செய்யப்பட்ட 'நமது ஈழநாடு' நிர்வாக இயக்குநர்

**சின்னத்தம்பி சிவமகாராசா** அவர்களிற்கு

எமது கண்ணீர் அஞ்சலிகள்

**நமது ஈழநாடு ஊழியர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## *வேலுப்பிள்ளை சுந்தரம் (சாமியப்பு)*

(பிரபல வர்த்தகர், மருந்துக்கடை)



உரும்பிராய்கிழக்கு, இந்துக் கல்லூரிய டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரம் நேற்று (21.08. 2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் தங் கப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான இலட்சுமி, கோமதி, பாக்கி யம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரராஜா (கனடா), சரோயினிதேவி, காலஞ்சென்ற யோகானந்தன், நகுலாதேவி (மட் டக்களப்பு), குமாரதாஸ் (கனடா), ரவீந்திரா (சுவிஸ்), செல்வகுமார் (கனடா), வசந்திராதேவி, சுகுமார்(சுவிஸ்), சுபத்திராதேவி (லண் டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாநிதி, கனகரட்ணம், உமாதேவி, பாலசிங்கம், வாணி, நளினி, லீலா, நித்தியானந்தன், மா யா, கதிர்காமநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2006) செவ்வாய்க்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தி இரண்டு மணி நேரத்தின் பின் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*(இந்துக் கல்லூரியடி)*
*உரும்பிராய்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## திருமதி *வீரசிங்கம் தையல்முத்து*

குப்பிழானை பிறப்பிடமாகவும் தற்போது சுவிஸை வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி வீரசிங்கம் தையல்முத்து (16.08.2006) புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் புஸ்பராணி, ஞானவடிவேல், கலாமதி, உமாதேவி, விக்கினேஸ்வரன், இராசேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2006) புதன்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*விளையாட்டரங்க வீதி,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**ந.சிவலிங்கம்**
*(சகோதரன்)*

## *சுபத்திரை சின்னத்துரை*

(பொன்குட்டி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும், கட்டுடை மானிப் பாயில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவி திருமதி. சுபத்திரை சின்னத்துரை 18.08.2006 வெள்ளிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சரா, ரூபன், விமலன், பவன், பாமினி ஆகியோரின் அன்புத் தாயும் உதயகுமாரி, ராஜ்குமார் ஆகியோரின் மாமியும் சங்கீதா, சதுர்ஷன், சந்தியா, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தையா, கன கம்மா, காலஞ்சென்ற இராசையா, இராசாத்தி, ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நவமலர், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, அன்னலட்சுமி, கனகரத்தினம், நேசமலர், குணபாக்கியம், குமாரசாமி ஆகியோரின் மைத்துனியும் திருமதி பத்மாவதி குமாரசாமியின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலை யில் நாளை (23.08.2006) புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"துவாரகை"*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*
*தொ.பே 077 6742013*

*தகவல்:*
**சி.விமலன்**
*(மகன்)*

# உணவுப் பொருள் ஏற்றிவரும் முகவர், வர்த்தகர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஓக.22

கொழும்பில் இருந்து உணவுப் பொருள், களை எடுத்துவரும் முகவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஊரடங்கு நேரம் நீக்கப்பட்டு ஒரு மணித்தியால நேரத்தில் யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல வணி கர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து பொருள்கள் எடுத்துவரப்படும் சமயம் முகமாலையில் நிறுத்தப்பட்ட பொதிகளின் உரிமையாளர்கள் மற்றும் அந்த லொறிகளில் பொருள் எடுத்து வந்தவர்களையும் இன்று வணிகர் கழகத் துக்கு வருமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது. (1)

# நயினை - நல்லூர் பாதயாத்திரை நாளை வந்துசேரும்

யாழ்ப்பாணம்,ஓக.22

நல்லூர்க் கந்தன் ஆலய தேர்த்திரு விழாவை முன்னிட்டு வருடம் தோறும் இடம்பெறும் நயினை - நல்லூர் பாத யாத்திரை இன்று செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆல யத்திலிருந்து நல்லூர் நோக்கிப் புறப் படவுள்ளது.

நயினை அம்மன் ஆலயத்தில் இடம் பெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து நல்லூர் நோக்கிப் புறப்படும் பஜனைப் பாதயாத்திரை குறிகாட்டுவான், புங்குடு தீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப் பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ். வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக தீர்த் தத் திருவிழாவான நாளை புதன்கிழமை நல்லூரை வந்தடையும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**முக்கிய அறிவித்தல்**

சகல அங்கத்தவர்களும் தவறாது நாளை புதன்கிழமை (23.08.2006) ஊர டங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் (1மணி நேரத்திற்குள்) சங்கத் தலைமைக் காரியா லயத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

- நிர்வாகம்.

## தவறிவிட்டது

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த தம்பித்துரை சசிகலா என்பவரு டைய தே.அடையாள அட்டை (756102990 V), விசேட அடையாள அட்டை என்பன 18.08.2006 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கட்டப்பிராய்க்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**தொ.பே 021 222 9181**


# மரண அறிவித்தல்

## *நாகலிங்கம் முத்தையா*

**(முன்னாள் பட்டின சபைத் தலைவர், சங்கானை)**

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப் பிடமாகக் கொண்ட நாகலிங்கம் முத்தையா நேற்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயமோகன், விஜயமாலா, விஜயமதி (வவுனியா)ஆகியோரின் பாச மிகு தந்தையும் வைத்திலிங்கம் திரு நாவுக்கரசு (கனடா), வைத்திலிங்கம் பொன்னுத்துரை (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பேரின்பராசா (வவி), இரா சேந்திரன் (வவுனியா), சரஸ்வதி ஆகி யோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2006) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக விளாவெளி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு : அவசர கால நிலையை கருத்தில் கொள்ளவும்

*தகவல்:*
**விஜயமோகன்**
*(மகன்)*

# திருமணநாள் ஒத்திவைப்பு

**24.08.2006 [ஆவணி 8 ஆம் நாள்] வியாழக்கிழமை அன்று திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில்**

செல்வன் வில்சன் அவர்களிற்கும்

செல்வி அனுஷா அவர்களிற்கும்

**நடைபெறவிருந்த திருமணம் தற்போது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட் டுள்ளது.**

பெற்றோர்:

| | |
|---|---|
| திரு.திருமதி.டானியல் வில்மட்<br>கோயில் வீதி,<br>3ஆம் ஒழுங்கை,<br>குருமன்காடு, வவுனியா. | திரு.திருமதி.இராஜரட்ணம்<br>பருத்தித்துறை வீதி,<br>கட்டப்பிராய்,<br>கோப்பாய் தெற்கு. |

# திருமணநாள் ஒத்திவைப்பு

*ஆவணி 8ஆம் திகதி (24.08.2006) அன்று யாழ்ப் பாணம், வண்ணை பன்றிக்கோட்டுப்பிள்ளை யார் ஆலய மண்டபத்தில்* **செல்வன் முகுந்தன்** *அவர்களுக்கும்* **செல்வி ஹிந்துஜா** *அவர்களுக் கும் நடைபெறவிருந்த திருமாங்கல்யதாரணம் நாட்டின் அசாதாரண நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*பின்னர் நடைபெறும் காலம் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் என்பதை அறியத்தரு கின்றோம்.*

திரு.திருமதி.சி.அற்புதராஜா
கரந்தன், நீர்வேலி.

திரு.திருமதி.கணநாதன்
31,பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17
★
03
★
1930



மறைவு
02
★
09
★
2005

**சின்னையா தர்மலிங்கம்**

(திதி : 22.08.2006)

ஆண்டுகள் பல கழிந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் வாருங்கள் - எம்மிடம்
கூடி நாம் உறவாடுவோம்.

அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

# மரண அறிவித்தல்

## *மீனாக்ஷி தாமோதரம்பிள்ளை*

**(மீனாம்பாள்)**

காரைநகர், துறைமுகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும், தற்போது 65/6, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை யில் வசித்தவருமான திருமதி மீனாக்ஷி தாமோதரம்பிள்ளை 20.08.2006 ஞாயிற்றுக்கிழமை காலை திருகோணமலையில் சிவபதம் அடைந்தார்

அன்னார் காரைநகர் பிரபல வர்த்தகர் அமரர் வைரமுத்து ஆறுமுகம்பிள்ளை - அமுதவல்லி தம்பதியரின் அன்பு மகளும் தெல்லிப்பழை, கட்டுவன் அமரர் சீனிவாசகம் தாமோதரம்பிள்ளை (பால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் இந்திராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கௌரி (ஓய்வு பெற்ற உப அதிபர்), பவானி (பகுதிநேர ஆங்கில ஆசிரியை, யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.), குகனேசன் (ஓய்வு பெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி காரைநகர்.) ஆகியோரின் பாசமிகு தாயும் திருஞானசம்பந்தர் (ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், உணவுத் திணைக்களம், திருமலை - நிர்வாக ஆலோசகர் PRIMA), சண் முகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சாவித்திரிதேவி (பெரும் பாக உத்தியோகத்தர் கீரிமலை, தொல்புரம் கமநல திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் உமா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம்), ஸ்ரீஸ்கந்தராசா (கிராம உத்தியோகத்தர்-காரைநகர்), ஆரூரன் (அபுதாபி), வித்தியா (ஆசிரியை, திருமலை விவேகானந்தா வித்தி) சர்வேஸ்வரன் (புகையிரத நிலைய அதிபர், கொம்பனி வீதி) உமாசுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆரணி, அபிராம், கிரிகரன் ஆகியோரின் பூட்டியும் அமரர் V.A கணபதிப் பிள்ளை (ஓய்வுபெற்ற கணக்காளர், புகையிரதத்திணைக்களம்) அவர்களின் சகோதரியும் மனோகரி, மாலினி ஆகியோரின் அத்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் திருகோணமலையில் நடைபெற்று பூத வுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொ.பே 026 2221504**

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# காலம் கடந்த ஞானம்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான அனுசரணைப் பணிக்குப் பொறுப்பாக நோர்வேயால் நியமிக்கப்பட்ட விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் இப்போது தெரிவித்திருக்கும் கருத்துகள் அவருக்கு 'சுடலை ஞானம்' பிறந்திருப்பதையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் இணைத்து ஐரோப்பிய ஒன்றியம் கடந்த மே மாதத்தில் எடுத்த முடிவு விபரீத விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்ற சாரப்பட அவர் இப்போது தெரிவித்திருக்கும் கருத்து, காலம் பிந்திப் பிறந்த ஞானமன்றி வேறில்லை.

இப்படித்தான் ஆகும் என்பதை இதே பத்தியில் பல தடவைகள் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி வந்தோம். அப்படித்தான் ஆகிவிட்டது என்று இப்போது உரைக்கின்றார் போவர்.

அது மாத்திரமல்ல. இப்போது புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத் தடை வந்தமைக்கு இலங்கை விடயத்தில் அனுசரணைத் தரப்பில் பொறுப்பாகப் பணியாற்ற வேண்டிய போவர் இழைத்த தவறு அல்லது அவரது போக்கே காரணம் என்று தமிழர்கள் தரப்பில் ஒரு அதிருப்திக் குரல் எழுந்ததையும் கூட நேரத்தோடு ஒரு தடவை சுட்டிக்காட்டியிருந்தோம்.

இலங்கை அரசும், புலிகளும் அமைதிப் பேச்சுக்களில் சமதரப்புகள் என்ற அடிப்படை அத்திவாரத்திலேதான் தற்போதைய அமைதிப் பேச்சுகள் கட்டடப்படுகின்றன என்பதையும், புலிகளுக்கு எதிராக மட்டும் ஐரோப்பிய ஒன்றியம் பக்கச் சார்பாக பெரும் தீங்கான முடிவை எடுப்பது அத்தகைய சமதரப்பு அடிப்படையைப் பாதிக்கச் செய்து, அதன் மூலம் அமைதி முயற்சிகளின் அடிப்படை அத்திவாரத்தையே சீர்குலைத்து விடும் என்பதையும் திரும்பத் திரும்ப - நேரத்துடனேயே - சுட்டிக்காட்டி வந்தோம்.

இலங்கை அரசை நம்பாமல் - சர்வதேச சமூகத்தின் நேரடிப் பங்களிப்பு உண்டு என்ற நம்பிக்கையில்தான் - தற்போதைய அமைதி முயற்சிகளில் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்பதையும், மேற்படி ஐரோப்பிய ஒன்றியத் தடை தமிழர் தரப்புக்கு எதிராக - ஒரு பக்கச் சார்பாக - எடுக்கப்படும்போது, சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையும் புலிகள் தரப்புக்குத் தகர்ந்துபோக, அமைதி முயற்சிகளும் குழம்பிப் போகும் ஆபத்துண்டு என்பதையும் தெளிவாகத் தெரிவித்து வந்தோம்.

அது மட்டுமல்ல. ஐரோப்பிய ஒன்றியத் தடை என்ற பூச்சாண்டியைக் காட்டி அடிபணிய வைப்பதற்கு - அச்சுறுத்தி அடக்குவதற்கு - அடங்கிப் போகின்றவர்கள் அல்லர் புலிகள் என்பதையும்கூட திட்டவட்டமான வசனங்களில் வெளிப்படுத்தி வந்தோம்.

கடைசியில் அவையே யதார்த்த நிகழ்வுகளாகி விட்டன.

இப்போது, ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்த காய் நகர்த்தலே அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்கச் செய்யும் வாய்ப்புகளைச் சிதறடிக்கச் செய்துவிட்டது என்று பகிரங்கமாகக் கூறுகின்றார் அனுசரணைத் தரப்பின் விசேட தூதுவர்.

அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிப்பது இத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தும் என்று விடுதலைப் புலிகள் நேரடியாக அனுசரணைத் தரப்புக்குத் தெட்டத் தெளிவாக முன்கூட்டியே தெளிவுபடுத்தியிருந்த நிலையில் -

ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத்தடை முயற்சி அமைதி முயற்சிகளையே அடியோடு குழப்பி விடும் என்பதைத் தமிழர் தரப்பு ஊடகங்கள் நேரத்துடனேயே தொடர்ந்து எச்சரித்து வந்த நிலையில் -

இன்று இப்படி அந்தந் தடை குறித்துப் பகிரங்கமாகக் குறை கூறி, அதன் விளைவுகளை விமர்சிக்கும் அனுசரணைத் தரப்பின் விசேட பிரதிநிதி ஹன்ஸன் போவர் போன்றோர், இவ்வாறான தடை வரமுன்னரே அதன் விளைவு இத்தகைய மோசமான நிலைமையை ஏற்படுத்தலாம் என்பதைப் பகிரங்கமாகவே ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எச்சரிக்கை விடுத்துத் தெரிவித்திருப்பார்களேயானால் ஐரோப்பிய ஒன்றியம் இத்தகைய முறையற்ற வேலையைச் செய்ய முன்வந்திருக்குமா?

குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாக ஐரோப்பிய ஒன்றியத் தடை வந்த பின்னர் வெளியில் நின்றுகொண்டு அதை போவர் போன்றோர் குறை கூறுவதில் - விமர்சிப்பதில் - அர்த்தமில்லை.

போவரின் விசேட தூதுவர் பதவியில் நோர்வேயின் தற்போதைய அமைச்சரான எரிக் சொல்ஹெய்ம் முன்னர் இருந்தார். அப்போதும் இலங்கை அரசுத் தரப்பின் பிரசார உத்தியின் பெறுபேறாக புலிகளைத் தடைசெய்து பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் முன்முயற்சி ஐரோப்பிய ஒன்றியத்தால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், எரிக் சொல்ஹெய்ம் சம்பந்தப்பட்ட நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து, நிலைமையை விளக்கி, அத்தகைய முடிவு அமைதி முயற்சிகளில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை சம்பந்தப்பட்டோருக்கு விரிவாக எடுத்துரைத்து, அத்தடை முயற்சியைத் தடை செய்தார்.

ஆனால், மீண்டும் அண்மையில் அந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டபோது, உண்மை நிலையை - யதார்த்தத்தை - சம் பந்தப்பட்டோருக்குத் திரும்பவும் விளக்கி, நிலைமையைத் தெளிவுபடுத்தி, சரியானதைச் செய்விக்க, பொறுப்பான பணியிலிருந்த ஹன்ஸன் போவர் போன்றோர் சரியாகக் காரியமாற்றவில்லை என்பதே தமிழர் தரப்பின் ஆதங்கமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடையைப் பெரிய பூதாகரமான விடயமாக முன்நிறுத்தி, அதைக் காட்டிப் புலிகளை சில விடயங்களுக்கு இணங்க வைக்க முயற்சிப்பதில் தாம் எடுத்த சிரத்தையை, அத்தடையால் எழக்கூடிய விபரீத விளைவுகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முன்கூட்டியே விளக்குவதில் போவர் காட்டியிருப்பாரானால் இந்த அமைதி முயற்சிகள் இப்போது சரியான தடத்துக்கு ஏறுவதற்கு சில சமயம் வாய்ப்புகள் கிட்டியிருக்கக் கூடும்.

அதைத் தவறவிட்டு விட்டு இப்போது அத்தடையை விமர்சிப்பது பலன் தரப்போவதில்லை.

# இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஆசிய மனித உரிமை அமைப்பு வேண்டுகோள்

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள்சபை இராஜதந்திர ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆசிய மனித உரிமை அமைப்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை வன்முறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் மற்றும் பாப்பரசர் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆனால், இலங்கையில் நடைபெற்ற பல தாக்குதல் சம்பவங்களில் எதிலுமே விசாரணை நடத்தப்படவில்லை.

சர்வதேச நிறுவனங்கள் விசாரணைகள் மேற்கொள்வதும் தடை செய்யப்படுகிறது. இனப்பிரச்சினை உள்ள பகுதிகளில் தொடர்புகொள்வது சிக்கலாக இருப்பதாக சர்வதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இருதரப்பு மோதல்களால் ஏற்படும் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் விதமாக முஸ்லிம் மக்களின் நிலைமை உள்ளது. பிரான்ஸைச் சேர்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஆகையால் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தங்களது பணியை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளனர்.

ஆகையால், இலங்கையில் உள்ள பொதுமக்களின் உயிர்களை ஐக்கிய நாடுகள் சபை காக்கவேண்டும். இதற்கான இராஜதந்திர ரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# செஞ்சிலுவைச்சங்க பணியாளர் வவுனியாவில் சுட்டுக்கொலை

வவுனியா, ஓக.22

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளைப் பணியாளரான நாகராசா தவரஞ்சிதம் (வயது 24) என்பவர் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள அவரது வீட்டில்வைத்து இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் பகுதியிலுள்ள அவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே அவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர் என்று கூறப்பட்டது. இவரது கொலை குறித்து தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(கீ)

# ஒரேநாளில் 543 அகதிகள் தமிழகத்துக்கு படையெடுப்பு

## மக்களின்றி வெறிச்சோடியது வங்காலை

மன்னார், ஓக. 22

மன்னார் வங்காலைப்பகுதியைச் சேர்ந்த 543 பேர் ஒரே நாளில் - நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையன்று- ஒரேயடியாக அகதிகளாக தமிழகத்தைச் சென்றடைந்திருக்கின்றனர்.

48 படகுகளில் 124 குடும்பங்களைச் சேர்ந்த 543 பேர் இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையைச் சென்றடைந்தனர்.

இவர்கள் அனைவருமே மன்னார் வங்காலைப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களை விசாரணைக்குட்படுத்திய தமிழகப் பொலிஸார் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனைவரையும் அனுப்பிவைத்தனர்.

இவ்வளவு அதிக எண்ணிக்கையானோர் ஒரே நாளில் தமிழகம் சென்றடைந்திருப்பதால் வங்காலைப் பகுதி வெறிச்சோடிக்காணப்படுகிறது என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(க)

## வேலணை பிரதேச சமுர்த்தி அலுவலருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.22

வேலணை மற்றும் புங்குடுதீவு சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தி பண முத்திரை பெறுவோருக்கு கொடுப்பனவை வழங்கவேண்டியுள்ளது என்றும் -

எனவே, தொடர்புடைய சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இன்று செவ்வாய்க் கிழமை பிரதேச செயலரைச் சந்திக்குமாறும் - கேட்கப்பட்டுள்ளது.

## கடமைக்குத் திரும்புமாறு மாநகர ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

தற்போதைய சூழ்நிலையில் யாழ். மாநகர சபை பிரதேசத்தில் சுகாதாரம், சுத்திகரிப்பு, நீர் விநியோகம் மற்றும் அவசிய பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் -

எனவே, மாநகர சபையின் அனைத்து ஊழியர்களையும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் தவறாது கடமைக்குச் சமுகமளிக்குமாறும் யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

# உயிலங்குளம் பாதையை திறந்துவிடுமாறு படைத்தரப்பிடம் அரச அதிபர் கோரிக்கை!

மன்னார் - உயிலங்குளம் பாதையைத் தற்காலிகமாகப் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடுமாறு மாவட்ட அரச அதிபர் வி. விஸ்வலிங்கம் மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரியிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து மன்னார் நகருக்கு அவசர வைத்திய சிகிச்சை மற்றும் அரச அலுவலகத் தேவைகளின் நிமித்தம் வந்த சுமார் 150 பேர் மாவட்ட செயலகத்தில் தமது பெயர்களைப் பதிந்து போக்குவரத்துக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நிலையிலேயே அரச அதிபர் உயிலங்குளம் பாதையைத் திறக்குமாறு இராணுவ உயரதிகாரியிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் சுமார் 50 இற்கும் மேற்பட்ட சிங்கள கட்டடத் தொழிலாளர்கள் உட்பட அரச அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கள் பலரும் பாதை மூடப்பட்டுள்ளதால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரமுடியாத நிலையிலுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உயிலங்குளம், மடு சோதனைச் சாவடிகள் மூடப்பட்டதையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான மடு, மாந்தை மேற்கு பிரதேசங்களில் உணவு, எரிபொருட் தட்டுப்பாடு என்பன நிலவுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை விட மடு ஆலய உற்சவத்திற்குச் சென்ற சுமார் 50 பேர் உட்பட ஆண்டான்குளம், கறுக்காக்குளம், பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் இரண்டாயிரம் பேர் ஆலயச் சுற்றாடலிலும், அகதி முகாம்களிலும் தங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## வெளிமாவட்ட அரச அலுவலர் வரவு பதிவதற்கு ஒழுங்கு

யாழ்ப்பாணம்,ஓக.22

வெளி மாவட்டங்களிலிருந்து பல்வேறு தேவைகளின் நிமித்தம் யாழ்.மாவட்டத்துக்கு வருகைதந்து மீண்டும் தங்களது அலுவலகங்களுக்குக் கடமைக்குச் செல்ல இயலாமல் தங்கியுள்ள அரச அலுவலர்கள் வரவுப் பதிவுகளை இனி வருங் காலங்களில் தமது வதிவிடத்துக்கு அண்மையிலுள்ள பிரதேச செயலகம் அல்லது உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் மேற்கொள்ள முடியும் என்று யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

## நாவற்குழி களஞ்சியத்தில் உணவு ஏற்றுவதற்கு ஏற்பாடு

நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி, தெல்லிப்பழை, சங்கானை, உடுப்பிட்டி, பருத்தித்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பல நோ.கூ.சங்கங்களின் பொது முகாமையாளர்கள் தத் தமது பல நோ.கூ.சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

## நீதிமன்ற ஊழியர்களின் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,ஓக.22

குடாநாட்டிலுள்ள அனைத்து நீதி மன்றங்களின் ஊழியர்களும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் தத்தமது பகுதியிலுள்ள நீதிமன்றங்களில் சமுகமளித்து வரவினைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று நீதியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## மக்கள் வங்கி ஊழியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.22

மக்கள் வங்கியின் சகல ஊழியர்களையும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாத நேரத்தில் தத்தமது கிளைகளுக்குச் சமுகமளிக்குமாறு மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார். வடமராட்சி, தென்மராட்சியைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளுக்குச் சமுகமளிக்க முடியும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

## தேரடியிற் சென்று தரிசித்தால் போதும்

*நல்லமலரெடுத்து நல்லூரை நாடிப்போய்*
*நல்ல மனதோடு நாம் பணிந்தால் - நல்லமயில்*
*ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்*
*தேறிவிடும் சிந்தை தெளி.*



*தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப்*
*பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய*
*மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ*
*நாட்டீரே கேளீர் நலம்.*

* * *

*காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட*
*ஆராத காதலடியரெலாஞ் - சீராகச்*
*சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை*
*என்னையவன் பார்த்தா னினிது*

*இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட் சென்றிடுமோ*
*என்றடியா ரேத்து மினியவொலி - நன்றுடைய*
*நல்லூரிற் றேரடியில் நான் கண்டு போற்றினேன்*
*சொல்லுந் தரமோ சுகம்*

- யோகர் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர வங்கிகளில் நேற்று சனக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக 22

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதை அடுத்து யாழ் நகரில் உள்ள வங்கிகளில் நேற்றைய தினம் சன நெருக்கடி அதிகரித்துக் காணப்பட்டது.

சேமிப்பிலுள்ள பணத்தை மீளப் பெறுவதிலும், தானியங்கி பணப்பரிமாற்ற இயந்திரத்தில் இருந்து பணத்தைப் பெறுவதிலும் வாடிக்கையாளர் பெரிதும் ஆர்வம் காட்டியதை அவதானிக்க முடிந்தது.

கொமர்ஷல் வங்கி கிளைகளில் தானியங்கி பணப்பரிமாற்ற இயந்திரம் மூலம் ரூபா 20 ஆயிரம் பெறக்கூடியதாகவிருந்தது. அதே போல் சேமிப்பிலிருந்து அதே தொகையான பணத்தை வாடிக்கையாளர் பெற்றுக் கொண்டனர்.

ஹற்றன் நஷனல் வங்கிக்கிளைகளில் நேற்றைய தினம் தானியங்கி இயந்திரம் மூலம் ரூபா 20 ஆயிரத்தையும் அதேபோல் சேமிப்பிலிருந்து அதேதொகையான பணத்தினையும் பெறமுடிந்தது என்று கூறப்பட்டது.

செலான் வங்கியில் சேமிப்பிலிருந்து 5 ஆயிரம் ரூபாவும், தானியங்கி இயந்திரம் மூலம் ரூபா 40 ஆயிரத்தினையும் பெற்றுக் கொள்ள முடிந்தது என்று வங்கி வாடிக்கையாளர் ஒருவர் கூறினார்.

## நோயாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே திருப்பி அனுப்பப்பட்டனர் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினரின் இச்செயலினால் அந்த நோயாளர்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருப்பி அனுப்பப்பட்ட கர்ப்பிணித் தாய்மார் இருவர், 9 நாள் குழந்தை ஒன்று, 15 நாள் குழந்தை ஒன்று மற்றும் 65 வயதுடைய வயோதிபர் ஒருவர் ஆகியோர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டுசெல்லப்பட் மூன்று வயது குழந்தை ஒன்றையும் படையினர் திருப்பியனுப்பியிருந்தனர். பின்னர் மீண்டும் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு அக் குழந்தை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

## தென்னிந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராயராகப் பணியாற்றிய ஆயர் ஜெபநேசனின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து இவர் பேராயராக நியமிக்கப்பட்டுள் ளார்.

பேராயர் தியாகராசா தென்னிந்திய திருச்சபையின் யாழ்.அத்தியாட்சாதீனத்தின் நான்காவது பேராயராவார்.

## நல்லூர் தேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர் மற்றும் தீர்த்த உற்சவங்களில் அடியார்கள் பங்குபற்ற வசதியாக இன்றும், நாளையும் ஊரடங்கை பெரும்பாலும் காலை வேளையில் தளர்த்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஜூலை 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 10ஆம் நாள் திருவிழாவரை உற்சவங்கள் வழமைபோன்று இடம்பெற்றுவந்தன கடந்த 11ஆம் திகதி குடாநாட்டில் மோதல்கள் வெடித்து ஊரடங்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து திருவிழாப் பூசைகள் ஆலயத்தின் உள்ளே மட்டும் நடைபெற்றன. சுவாமி வெளிவீதி வலம் வருவது நிறுத்தப்பட்டது.

அவ்வப்போது ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் அடியார்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டனர்.

இந்நிலையில் இன்றைய தேர்த் திருவிழா வழமைபோன்று நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படவில்லை என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வடக்கின் பெரும் கலாசாரத் திருவிழா என்று வர்ணிக்கப்படும் நல்லூர் பெருந்திருவிழா போர்ச் சூழ்நிலை காரணமாக இம்முறை சோபை இழந்துவிட்டது.

ஆலயத்தில் ரத பவனி தடைப்படுவது 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்பட்டது.

## சண்டை நடக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரின் பணிகள் தொடர்பில் அக்கறை செலுத்தாத காரணத்தால் அவர்களை வாபஸ் பெறுவது மேலானது என்று கண்காணிப்புக் குழு தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கண்காணிப் புக் குழுவின் பேச்சாளர் ஓமர்ஸன் பி.பி.ஸிக்கு அளித்த செவ்வியில் கூறியதாவது:-

கேள்வி:- போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவைச் சேர்ந்த பல கண்காணிப்பாளர்கள் பல்வேறு இடங்களில் இருந்தும் மீண்டும் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டதாகவும் - கண்காணிப்புக் குழு மாற்றி அமைக்கப்படுவதாகவும் - செய்திகள் தெரிவிக்கின்றனவே. அதுபற்றி....?

பேச்சாளர் :- நாம் உண்மையில் அனைவரையும் மாற்றி அமைக்கவில்லை. சிலர் தாம் பணியாற்றும் இடங்களில் அப்படியே இருப்பார்கள். என்ன நடக்கின்றது என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

நாம் கொழும்பில் கூடி அனைத்தையும் மறு சீரமைப்போம். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே நாங்கள் இதனை முக்கியமாகச் செய்கின்றோம். இந்த நாட்டின் நிலைமை மிகவும் ஸ்திரமற்று இருக்கின்றது. குறிப்பாக யாழ். குடாநாட்டிலும், திருகோணமலையிலும் கூட அந்த நிலையே காணப்படுகின் றது.

உங்களுக்குத் தெரியும் கடந்த வியாழக்கிழமை எமது கண்காணிப்பாளர்கள் திருகோணமலையில் இருந்து, வெளியேறி இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் எமது கண்காணிப் பாளர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அங்கு போர் நடக்கின்றது. ஆனால், நாங்கள் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கவே இங்கு வந்திருக்கின்றோம்.

இது ஒரு சிரமமான நிலை. அது மாத்திரமல்ல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வெளியேறியதால், எம்மை மறுசீரமைக்க வேண்டிய ஒரு தேவையும் ஏற்பட்டிருக்கின்றது.

கேள்வி:- ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்த பின்பு, விடுதலைப் புலிகள் கோரியதற்கேற்ப இந்த ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள், குழு வில் இருந்து வெளியேறவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியதும் இதற்குக் கார ணமா?

பேச்சாளர்:- ஆம். அது முடிவின் ஒரு பகுதியாகும். ஆயினும், பாதுகாப்புத்தான் இங்கு எமக்கு முக்கிய பிரச்சினையாகும். எமது கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதி செய்தாகவேண்டும்.

சில நாட்களில் எமது ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் விலகுகின்றார்கள். ஆகவே, அவர்கள் கொழும்புக்கு வரவேண்டும். அவர்கள் தமது தாய்நாடுகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும். அது விடுதலைப் புலிகள் மிகவும் கண்டிப்பாக விதித்த நிபந்தனை காரணமாகவே நடந்தது. அதாவது, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து எந்தக் கண்காணிப்பாளர்களும் இங்கு பணியாற்றக்கூடாது என்று அவர்கள் கூறியதாலேயே அது நடந்தது. (ஐ)

## மூத்த தமிழ் அரசியல்வாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் முதல் 2001 டிசெம்பர்வரையான காலப் பகுதியிலும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

இறுதியாக நடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்ட இவர், சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'நமது ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பிப்பதில் முன்னின்று செயற்பட்ட இவர், இறக்கும் வரை அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார்.

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாகவே ஊரடங்கு அமுலில் இருக்கிறது. இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இரவு 7.30 மணியளவில் சிவமகாராஜா தங்கியிருந்த வீட்டுப் பக்கமாக சூட்டுச் சத்தங்கள் கேட்டிருக்கின்றன.

தினமும் காலையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு வழிபாட்டுக்காக வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் சிவமகாராஜா. நேற்றுக் காலையில் இவர் கோவிலுக்கு வராததையடுத்து இவரது வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளை அவர் இருந்த அறையின் ஜன்னல் வழியாக அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது என்பது விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. சிவமகாராஜாவின் நெஞ்சுப் பகுதியில் குண்டு பாய்ந்து காணப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். சடலம் தெல்லிப்பளை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதபரிசோதனையின் பின் நேற்றுப் பகலே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணாத்தின் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குப் பல்வேறு உதவிகளையும் செய்து வந்த இவர், அந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரி நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னிலையில் நின்று செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், நல்லூர், நீர்வேலி, அச்சுவேலி, அளவெட்டி/மல்லாகம், சுன்னாகம், சங்கானை, மானிப்பாய், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, புலோலி, பருத்தித்துறை, கட்டைவேலி, உடுப்பிட்டி, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, வேலணை பல நோ.கூ.சங்கங்கள் மற்றும் பல. நோ.கூ.சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் லொறிகள் இதன் பொருட்டு பயன்படுத்தப்படவுள்ளன.

குறிப்பிட்ட சங்கங்களின் லொறிகளுக்கும், சாரதிகளுக்கும் உரிய ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களை தத்தமது பகுதிக்குரிய இராணுவப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஊரடங்கு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டதும் சாரதிகள் லொறிகளுடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை கோண்டாவில் களஞ்சியத்தில் உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதனைச் சந்திக்க வேண்டும் - என்றும் அரச அதிபர் மேலும் கூறினார்.

இதற்கிடையில் - வடக்கு நோக்கிப் புறப்படவுள்ள கப்பலில் நேற்றுமாலைவரை ஆயிரத்து 200 மெற்றிக்தொன் பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளன என்றும் -

பொருள்களை ஏற்றும் பணி நேற்றிரவும் தொடர்ந்தது என்றும் -

இன்னும் ஓரிரு தினங்களில் கப்பல் வடக்கு நோக்கிப் புறப்படும் என்றும் - அனர்த்த நிவா ரண அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (1)

## மோதல் தவிர்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறிய விடயங்களை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது. நேற்று மாலை விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்கம் வலிந்து எந்தவிதமான தாக்குதல்களிலும் ஈடுபடவில்லை. விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக தற்காப்புத் தாக்குதல்களிலேயே அரச படைகள் ஈடுபட்டு வருகின்றன.

அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும், சமாதானப் பேச்சுக்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது. யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்தும் எனைய அடிப்படை விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுவதற்காக விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் திரும்பும்வரை காத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் முன்வைக்கக்கூடிய ஓர் உறுதியான - தெளிவான - அர்ப்பணிப்புடனான மோதல் தவிர்ப்பினை அரசு சிரத்தையுடன் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

இவ்வாறான ஒரு மோதல் தவிர்ப்பானது யுத்த நிறுத்தத்துக்கு முரணாக சம்பூர் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பிரசன்னத்தால் திருகோணமலைத் துறைமுகத்துக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்பதனைத் தெளிவாக விளக்கக்கூடிய செயற்பாட்டினைக் கொண்டிருப்பது அவசியம் - என்று இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி தெரிவித்தார் என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், தாங்கிப் படை 'பணி ஒன்றையும் கட்டளை அதிகாரியாக வழிநடத்திய அனுபவம் அவருக்கு உண்டு.

அமெரிக்க யுத்தக் கல்லூரி (1998), அமெரிக்க இராணுவக் கட்டளை மற்றும் பொதுக் கல்லூரி (1991), நோர்வே இராணுவ பொது அதிகாரிகள் கல்லூரி (1988), நோர்வே இராணுவ அக்கடமி (1977) ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்' இவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (உ)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிவமகாராசா

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும்)



சின்னத்தம்பி சிவமகாராசா (20.8.2006) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.சின்னத்தம்பியின் சிரேஷ்ட புதல்வரும் திருமதி. நகுலேஸ்வரி, கைலைமகான் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் வலயம்), திருமதி. அ.ஞானேஸ்வரன் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் வலயம்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பெரியதம்பி (மாவட்ட நீதிமன்ற எழுதுவினைஞர்), மலைமங்கை (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பிரதி அதிபர்), ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் பெ.லம்போதரன் (திட்டமிடல் அலுவலர் செட்டிக்குளம், வவுனியா), பெ.சர்வதயாபரன், ஞா.அபர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.08.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மல்லாகம் கோணப்புலம் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சி.கைலைமகான்

பெ.நகுலேஸ்வரி

அ.ஞானேஸ்வரன்.

(சகோதரர்கள்)



இலங்கை
தேசிய சமாதான
பேரவை

'உள்ளே ஒரு பார்வை'
புத்தக வெளியீடு.



"பேச்சுவார்த்தையூடான
சமாதானம் - கருத்தரங்கு."

2006 ஆகஸ்ட் 22
பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம்

"உள்ளே ஒரு பார்வை" எனும் நூல் தெற்கு ஊடகவியலாளர்களின் வடக்கிற்கான பயணத்திற்கான அனுபவங்களையும், கருத்துக்களையும் தாங்கி வருகின்ற ஒரு வெளியீடாகும். இப்பயணத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான ஊடகவியலாளர்கள் நாட்டின் பிரதானமான ஊடகங்களின் பிரதேசப் பிரதிநிதிகளாவர். யுத்த நிறுத்தத்தின் பின் வடக்கு மக்களின் வாழ்க்கையினை இந்நூல் பிரதிபலிக்கிறது.

(கலந்து கொள்ளல் - அழைப்பு விடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும்)

CSL


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org